# ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம்

## உத்தரக்ருத்யம்
**குறிப்புகள்**

ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: அஸ்மத் ஸர்வ குருப்யோ நம:
சரணாகதன் இங்குள்ள காலம் இருக்க வேண்டிய முறை



சரணாகதன் இங்குள்ள காலம் இருக்க வேண்டிய முறை
உத்தரக்ருத்யாதிகாரம் (குறிப்புகள்) - ஸ்வாமி தேசிகன் அருளிய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம்

இப்படி அல்ப ஸுகமும் மற்றும் துக்கங்களோடும் கூடிய ஸம்ஸார பந்தத்திலிருந்து முற்றிலுமாக விடுபட்டு மனத்திற்கும் வாக்கிற்கும் எட்டாத ஸுக ரூபமாக மட்டுமே இருக்கக் கூடிய பரமபதத்தை அடைய எண்ணி, சாஸ்த்ரத்தில் விதித்த சரணாகதியை ஒரு ஸதாசார்யன் மூலமாக அனுஷ்டித்த ஒரு சரணாகதன், ஸ்வ நிஷ்டையுடன் இருந்து கொண்டு இங்குள்ள காலம் செய்ய வேண்டிய செயல்களை விளக்கும் அதிகாரம் உத்தரக்ருத்யாதிகாரம். அதை ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம் என்ற க்ரந்தத்தில், 15வது அதிகாரமான ‘உத்தர க்ருத்ய அதிகாரத்தில்’ விவரிக்கிறார் ஸ்வாமி தேசிகன்.

இந்த அதிகாரத்தின் சுருக்கத்தை ஒரு ஸம்ஸ்க்ருத காரிகை மூலம் முதலில் தெளிவு படுத்துகிறார்.

ஸந்தோஷார்த்தம் விம்ருசதி முஹு: ஸத்பி: அத்யாத்ம வித்யாம்
நித்யம் ப்ரூதே நிசமயதி ஸ்வாது ஸுவ்யாஹ்ருதாநி
அங்கீகுர்வந் அநக லலிதாம் வ்ருத்திம் ஆதேஹபாதாம்
த்ருஷ்டா த்ருஷ்ட ஸ்வ பர விகமே தத்த த்ருஷ்டி: ப்ரபன்ன:

அதாவது, ஒரு சரணாகதன் இங்குள்ள காலம் இவ்வாறு இருக்க வேண்டும்:

1. மோக்ஷத்திற்கான சரணாகதியை அனுஷ்டித்தவன், கண்கூடாக காண்கிற சரீர வாழ்க்கையிலும் கண்ணுக்கு இலக்கு ஆகாத பிறகு வரக்கூடிய மோக்ஷ வாழ்க்கையிலும், தன் பொறுப்பு நீங்கி விட்ட விஷயத்தில் கவனம் உடையவனாய் இருக்க வேண்டும்.

2. இச்சரீரம் அழியும் வரையில் குற்றம் அற்றதும் இனியதுமாய் உள்ள வாழ்க்கையை கை கொள்ள வேண்டும்.

3. மன மகிழ்ச்சாக்காக பகவத் ஸ்ரீ ராமானுஜர் அருளிய ஸ்ரீபாஷ்யத்தை (வ்யாஸரின் ப்ருஹ்ம ஸுத்ர வ்யாக்யானம்) ப்ருஹ்ம வித்துக்களான பெரியோர்களுடன் அடிக்கடி பேசிக் கொண்டிருக்க வேண்டும்.

4. செவிக்கு இனிய செஞ்சொற்களாகிய ஆழ்வார்கள் அருளிச் செயலை எப்பொழுதும் அனுஸந்திக்க வேண்டும்.

5. தான் கற்றதை பிறருக்கும் எடுத்து கூறி மகிழ வேண்டும்.

இந்த சரணாகதனுக்கு, இங்குள்ள வாழ்க்கையில், ஒரு விதத்திலே சம்பந்தம் அற்று, மற்றொரு விதத்திலே சம்பந்தத்தோடு இருந்து கொண்டு தன் ஸ்வரூபத்திற்கு ஏற்ற மேற் சொன்ன செயல்களை உத்தரக்ருத்யமாக செய்ய வேண்டும்.

உதாரணமாக, ஒரு பெரிய வீட்டை விலைக்கு வாங்கிய ஒருவன், தான் குடியிருக்கும் சிறிய வீட்டை வேறொருவரிடம் விற்ற பிறகும், அந்த சிறிய வீட்டில் வாடகைக்கு சில காலம் இருக்க நேர்ந்தால், எப்படி அங்கே இருப்பானோ அவ்வாறு பரமபதம் என்கிற பெரிய வீட்டை அடைவதற்காக சரணாகதி அனுஷ்டித்து விட்ட ஒருவன், சரீர காலம் முடியும் வரை இங்கு இருக்க வேண்டிய நிலை இருப்பதினால், அதே கண்ணோட்டத்தோடு இருந்து போக வேண்டும்.
அதாவது,

* வாடகைக்கு இருக்கும் அந்த சிறிய வீட்டை அவன் சுத்தமாக வைத்திருப்பானே அன்றிக்கு, அங்கு தாற்காலிகமாக வசிக்கும் காலத்தில் அந்த வீட்டை மாற்றி சீரமைக்க எந்த ஒரு பெரிய அளவு முயற்சியையும் மேற் கொள்ள மாட்டான். அதே போல் மோக்ஷ பலனுக்காக காத்திருக்கும் இந்த சரணாகதன், இங்குள்ள காலம் தன் சரீரம் சம்பந்தமான கடமைகளை சரிவர செய்து போக வேண்டுமே அன்றிக்கு, கர்மாவின் அடிப்படையில் வரும் போகங்களில் ஈடுபாட்டை வளர்த்துக் கொள்ளக் கூடாது.

* தாற்காலிகமாக சிறிய வீட்டில் வசித்தாலும், தான் செல்ல இருக்கும் பெரிய வீட்டை நினைத்து மகிழ்ச்சியோடே தானே அவன் இருப்பான்! அதே போல் இந்த சரணாகதனும் இங்குள்ள காலம், தான் பெற இருக்கும் பெரும் பலனை எதிர் நோக்கி, கல்யாணத்திற்கு நாள் குறித்த ஒரு ப்ருஹ்மசாரி கல்யாண நாளை எதிர்பார்ப்பது போல், மகிழ்ச்சியோடு காத்திருந்து இங்குள்ள கடமைகளைச் செய்ய வேண்டும்.

ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: அஸ்மத் ஸர்வ குருப்யோ நம:
சரணாகதன் இங்குள்ள காலம் இருக்க வேண்டிய முறை
உத்தரக்ருத்யாதிகாரம் (குறிப்புகள்) - ஸ்வாமி தேசிகன் அருளிய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம்

சரணாகதன் இங்குள்ள காலம் இருக்க வேண்டிய முறை
உத்தரக்ருத்யாதிகாரம் (குறிப்புகள்) - ஸ்வாமி தேசிகன் அருளிய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம்

உத்தரக்ருத்யத்தின் ப்ரகாரம்:

ஐந்து அங்கங்களோடு கூடிய, சாஸ்த்ரத்தில் விதித்த சரணாகதியை ஒரு ஸதாசார்யன் மூலமாக அனுஷ்டித்த ஒரு சரணாகதன், ஸ்வ நிஷ்டையுடன் இருந்து கொண்டு இங்குள்ள காலம் செய்ய வேண்டிய செயல்களே உத்தரக்ருத்யமாகும்(உத்தரம் = பிறகு; க்ருத்யம் = செயல்கள்; உத்தரக்ருத்யம் = சரணாகதி அனுஷ்டானத்திற்கு பிறகு உள்ள செயல்கள்). மோக்ஷதத்திற்காக செய்யப் பட்ட சரணாகதியின் பலன் 'ஞானானந்த மயா லோகா:' (தெளிவு உடைய பூரண ஞானமும், பூரண ஆனந்தமும் உடைய லோகம்) என்று சொல்லக் கூடிய பரமபதத்தில் செய்யக் கூடிய ஸுக ரூபமான பகவத் கைங்கர்யம் (சேவை). இவ்வுலகிலேயே அக்கைங்கர்யத்தை உத்தரக்ருத்யமாக செய்ய வேண்டும் என்பதை விளக்குகிறார் ஸ்வாமி தேசிகன்.

இந்த கர்ம பூமியில் இருந்துக் கொண்டு, ஒரு விதத்திலே உலக சம்பந்தத்திலிருந்து விலகி, மற்றொரு விதத்திலே இங்குள்ள சரீர சம்பந்தமான கடமைகளை செய்துக் கொண்டு இருக்கும் சரணாகதனுக்கு ஸ்வரூப அனுரூபமான உயர்ந்த தத்வ ஞானம் பெற்று அனுபவிப்பது உத்தரக்ருத்யமாய் இருக்கும்.

'தரித்திருந்தேனாகவே தாரா கணப்போர், விரித்துரைத்த வெந்நாகத் துன்னை, - தெரித்தெழுதி வாசித்தும் கேட்டும் வணங்கி வழிபட்டும், பூசித்தும் போக்கினேன் போது' அதாவது, திருமழிசைபிரான் அருளிச்செய்த நான்முகன் திருவந்தாதியில் கூறியபடி எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணனது (ஸ்வரூப) தன்மை, (ரூப) உருவம், (குண) பண்பு, (விபூதி) சொத்துக்களைப் பற்றிய விஷயங்களை வாசித்தும், கேட்டும், வணங்கி, வழிபட்டும், பூஜித்தும் பொழுதை போக்க வேண்டுவதே உத்தரக்ருத்யம்.

'கார்க்கலந்த மேனியான் கைகலந்த ஆழியான், பார்க்கலந்த வல்வயிற்றான் பாம்பணையான், சீர்கலந்த சொல்நினைந்து போக்காரேல் சூழ்வினையின் ஆழ்துயரை, என்நினைந்து போக்குவரிப் போது?' அதாவது, நம்மாழ்வார் அருளிச்செய்த பெரிய திருவந்தாதியில் கூறியபடி எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணனது குணங்களை கூறும் ஸ்ரீஸூக்திகளை நினைத்துக்

கொண்டு கர்மத்தினால் உண்டான இன்னல்களை ஜனங்கள் போக்கிக் கொள்ள வேண்டும், இல்லாவிடில் ஸம்ஸார துக்கத்தை எதை நினைத்துப் போக்குவது? என வேண்டுவதாய் உத்தரக்ருத்யம் அமைய வேண்டும்.

'ஒழிவில் காலமெல்லாம் உடனாய் மன்னி, வழுவிலா அடிமை செய்ய வேண்டும்நாம், தெழிகு ரல்அரு வித்திரு வேங்கடத்து, எழில்கொள் சோதி எந்தைதந்தை தந்தைக்கே.' அதாவது, நம்மாழ்வார் அருளிச்செய்த திருவாய்மொழியில் கூறியபடி எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணனின் அர்ச்சா வடிவத்தை இடைவிடாததாகவும், குற்றமற்றதாகவும் (குற்றம் என்பது, 'நான் செய்கிறேன்' என்ற எண்ணம், அது அஹங்காரம்; 'எனக்காக செய்கிறேன்' என்ற எண்ணம், அது மமகாரம்) செய்து போகிற கைங்கர்யத்தை எம்பெருமானின் சந்தோஷத்திற்காக என்ற எண்ணத்தோடு செய்ய வேண்டும்.

'அஹம் ஸர்வம் கரிஷ்யாமி ஜாக்ருத: ஸ்வபதஸ்சதே. பரவானஸ்மி காகுஸ்த த்வயி வர்ஷ சதம் ஸ்திதே. ஸ்வயம் து ருசிரே தேசே க்ரியதாம் இதி மாம் வத' அதாவது, இளைய பெருமாள் ஸ்ரீ ராமனிடம், வன வாஸத்தின் போது, நடத்திக் காட்டியது ஆரண்ய காண்டத்தில் உள்ளது; 'ஸ்ரீ ராமா! நீ நூற்றுக் கணக்கான வருடங்கள் இருந்தாலும், நான் உனக்கு ஸகல வித கைங்கர்யத்தையும் செய்வேன். தேவரீர் உகந்த இடத்தில் பரணசாலையை அமைக்குமாறு அடியேனுக்கு கட்டளை இட வேண்டும்' என்று லக்ஷ்மணன் விண்ணப்பித்து கைங்கர்யம் செய்ததாக ஸ்ரீமத் ராமாயணத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது. கைங்கர்யமாவது, 'ஸ்வாமி உகந்த ஏவல் தொழில்'. லக்ஷ்மணன் ஸ்ரீராமனை கேட்டு அறிந்து கைங்கர்யம் செய்ததாக ஸ்ரீமத் ராமாயணத்தில் குறிப்பிடப் பட்டுள்ளது.

ஆனால், ஒரு சரணாகதன் இங்குள்ள காலம் செய்யும் பகவத் கைங்கர்யம், ஸர்வேஸ்வரனை நேரிலே கேட்டு அறிந்து செய்ய இயலாததாகையால், சாஸ்த்ரத்தைக் கொண்டே எம்பெருமானான ஸ்ரீமந் நாராயணனது திருவுள்ளத்தை அறிய வேண்டும். இந்த சரணாகதன் செய்யும் அனைத்து பகவத் கைங்கர்யங்களும் சாஸ்த்ரத்தின் அனுமதி உள்ளதாகவே இருக்க வேண்டும். தன் மனதில் தோன்றியவாறு செய்யும் கைங்கர்யம் குற்றம் உள்ளதாகவே அமையும். அது கைங்கர்யம் ஆகாது.

ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: அஸ்மத் ஸர்வ குருப்யோ நம:
சரணாகதன் இங்குள்ள காலம் இருக்க வேண்டிய முறை
உத்தரக்ருத்யாதிகாரம் (குறிப்புகள்) - ஸ்வாமி தேசிகன் அருளிய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம்

சரணாகதன் ஆசார்யனிடம் அர்த்தங்களை முறைப்படி கேட்டு தெளிதல்:

1. ஒரு சரணாகதன், தன் முக்கிய கடமையாகிற சரணாகதியை செய்துவிட்ட படியால், தான் க்ருதக்ருத்யன் (சரணாகதி செய்து நிச்சயமாக வரும் மோக்ஷ பலனுக்காக காத்திருப்பவன்) என்று எண்ணி, இனி ஞானம் பெறுவதினால் பயன் என்ன? என்கிற எண்ணம் கொள்ளலாகாது என்று விளக்குகிறார் ஸ்வாமி தேசிகன். தன் நிஷ்டைக்கு உதவுகிற, தெளிய வேண்டும் அர்த்தங்களில் தனக்கு தெளிவு இல்லாத விஷயங்களை இங்குள்ள காலம் பகவத் அனுபவ பூர்த்திக்காகவும் மோக்ஷ பலனில் அளவு கடந்த ஆசை ஏற்படும் படியாக இருக்கவும், தெளிந்து போக வேண்டும். இது உத்தரக்ருத்யத்தின் (சரணாகதி அனுஷ்டானத்திற்கு பிறகு உள்ள செயல்களின்) ஒரு அம்சம்.

2. 'தத் பாத பக்தி ஞானாப்யாம் பலம் அந்யத் கதாசன. ந யாசேத் புருஷோ விஷ்ணும் யாச நான்நச்யதி த்ருவம்' அதாவது, ஒரு சரணாகதன், எம்பெருமானிடத்தில் ஞானத்தையும்

பக்தியையும் தவிர வேறு எதையும் கேட்கலாகாது. அப்படி எம்பெருமானிடத்தில் உலக ஸுகத்தை ப்ரார்த்தித்தால், அவனுக்கு நாசம் நிச்சயம் ஏற்படும். அதாவது, ஞானம் மற்றும் பக்தி என்கிற செல்வங்கள் கண்டிப்பாக அழிந்து போகும் என்கிறது சாஸ்த்ரம். ப்ராக்ருத விஷயமான பலன்களில் ஏழு விதமான குற்றங்கள் இருப்பதாக சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

i) அல்பத்வம் - அளவில் குறைவு; ii) அஸ்திரத்வம் - நிரந்தரம் அற்ற தன்மை; iii) துக்க மூலத்வம் - அதை அடையும் முயற்சியில் உள்ள துக்கம்; iv) துக்க மிஸ்ரத்வம் - அனுபவிக்கும் போது துக்கம் கலந்த ஸுக ரூபமான பலன்; v) துக்கோதர்கத்வம் - ஸுகானுபவம் முடியுமே என்ற துக்கம்; vi) விபரீத அபிமான மூலத்வம் - தன்னைப் பற்றிய உண்மையற்ற எண்ணங்கள்; vii) ஸ்வாபிக ஆனந்த விருத்வத்வம் - இயல்பான சந்தோஷத்திற்கு மாறானது

3. 'தத் வித்தி ப்ரணிபாதேன பரிப்ரஸ்ணேன ஸேவயா உபதேக்ஷ்யந்தி தே ஞானம் ஞானினஸ் தத்வதர்ஷின:' என்கிறபடியே தத்வ ஞானம் உள்ளவர்களிடம் அடி பணிந்து சாஸ்த்ர விஷயங்களை கேட்டு அறிய வேண்டும் என்கிறான் கீதையில் கண்ணன். அதாவது,

# நாம் ஆத்ம விஷயத்தை கேட்கும் போது, அந்த ஆசார்யனுக்கு தத்வ விஷயத்தில் தெளிவான கலக்கமற்ற ஞானம் இருக்கிறதா என்று முதலில் அறிய வேண்டும். இதற்காக தான், கண்ணன் கீதையில் 'ஜ்ஞாநிநஸ் தத்வதர்ஷிந:' என்ற வார்த்தைகளை உபயோக படுத்தியிருக்கிறான். 'ஆத்ம விஷயங்களை' பற்றிய அறிவை பெற ஒரு சிறந்த 'குரு பரம்பரையை' பார்த்தே ஆசார்யனை தேர்ந்தெடுக்க வேண்டும். உலக உதாரணங்களை காட்டி விளக்குவது ஆத்ம விஷயத்திற்கு பொருந்தாது. ஆத்ம விஷயம் நம் புலன்களுக்கு அப்பாற் பட்டது. அதனால், ஆசார்யனுக்கு தெளிவான சாஸ்த்ர ஞானம் மிக முக்கியம். இந்த விஷயத்தில், பல உலக உதாரணங்களினால், சாஸ்த்ரங்களை தவறாக புரிந்து கொண்டு, மதி மயக்கம் கொண்டவர்களே அதிகம்.

# 'ப்ரணிபாதேன' என்ற சொல்லுக்கு அர்த்தமாவது, இம்மாதிரி விஷயங்களை அறிய ஆவல் கொண்ட சிஷ்யன் கீழே விழுந்து ஆசார்யனை நமஸ்கரித்து விஷயங்களை கேட்க வேண்டும். தத்வ விஷயங்களை உள்ள படி அறிய ஆசார்யனிடம் அளவு கடந்த பக்தி தேவை என்று சாஸ்த்ரங்கள் கூறுகின்றன.

# நாம் ஆசார்யனிடம் சந்தேகத்தை தெளியும் போது 'பரிப்ரஷ்னம்' செய்து கேட்க வேண்டும் என்கிறான் கண்ணன். அதாவது, சந்தேகத்தை நேரிடேயாக கேட்காமல், சந்தேகத்திற்கான காரணங்களை கூறி கேள்விகளை கேட்க வேண்டும். ஆசார்யனை பரீட்சிக்கவோ அல்லது நமது ஞானத்தை வெளி காட்டவோ கேள்வி கேட்பது முறை ஆகாது என்று கருத்து.

4. 'மந்தோப்யமந்த தாமேபி ஸம்ஸகேண விபஸ்சித: பங்கஸ்சித்த: பலஸ்யேவ நிகர்ஷேணாவிலம் பய:' என்கிறபடியே தேத்தாங்கொட்டையை கலந்த நீர் எவ்வாறு தெளிவு அடைகிறதோ அது போலே, அறிஞனுடைய சேர்க்கையால் மூடனும் அறிவாளி ஆகி விடுவான். ஆக, ஒரு சரணாகதன் சாஸ்த்ர ஞானம் தெளிவாக உள்ளவர்களிடம் கலந்து பழக வேண்டும்.

ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: அஸ்மத் ஸர்வ குருப்யோ நம:
சரணாகதன் இங்குள்ள காலம் இருக்க வேண்டிய முறை

உத்தரக்ருத்யாதிகாரம் (குறிப்புகள்) - ஸ்வாமி தேசிகன் அருளிய ஸ்ரீமத் ரஹஸ்யத்ரயசாரம்

பரமேகாந்திகளுடன் (மோக்ஷ பலனில் மட்டுமே ஆசை கொண்டு ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனை மட்டுமே பூஜிப்பவர்கள்) சேர்ந்து இருந்து தன் தகுதிக்கு ஏற்ப அவரை பின்பற்றுதல்:

1. மேலும், ஒரு சரணாகதன், தன் முக்கிய கடமையாகிற சரணாகதியை செய்துவிட்ட படியால், தான் க்ருதக்ருத்யன் (சரணாகதி செய்து நிச்சயமாக வரும் மோக்ஷ பலனுக்காக காத்திருப்பவன்) என்ற எண்ணத்தோடு, தன் ஸ்வரூபத்திற்கு ஏற்ற, ஞான அனுஷ்டான சீலர்களான பரமேகாந்திகளுடன் சேர்ந்து இருந்து அவர்களிடம் தெளிவு பெற்று, அது போல நடந்து போக வேண்டும். இதுவும் உத்தரக்ருத்யத்தின் (சரணாகதி அனுஷ்டானத்திற்கு பிறகு உள்ள செயல்களின்) ஒரு அம்சம்.

2. 'யஸ்ய அனுபவ பர்யந்தா புத்திஸ் தத்த்வே பிரதிஷ்டிதா. தத்த்ருஷ்டி கோசரா சர்வே முச்யந்தே சர்வகில்பிஷை' (அதாவது, பகவத் அனுபவத்தை எல்லையாகக் கொண்ட தத்வ ஞானம் நிலை பெற்றவரான பரமேகாந்திகளின் கடாக்ஷத்திற்கு இலக்கான அனைவருக்கும் பாபங்கள் நீங்கப் பெறுகின்றன), என்கிறபடியே அனுஷ்டானமுடையவர்களிடம் நெருங்கி இருந்து போக வேண்டும். அவர்களிடம் தன்னுடைய வர்ண-ஆஸ்ரம தர்மங்களுக்கு ஏற்ப தான் செய்ய வேண்டிய சாஸ்த்ரத்தில் விதித்த செயல்களை கற்று செய்ய வேண்டும்.

3. 'யாவானர்த்த உதபானே ஸர்வத: ஸம்ப்லுதோதகேதாவான்ஸர்வேஷு வேதேஷு ப்ராஹ்மணஸ்ய விஜானத:' என்று கண்ணன் கீதையில் உபதேசிக்கிறான். அதாவது, தண்ணீர் சூழ்ந்த குளத்தில் தாகத்திற்கு தேவையான நீரை மட்டுமே ஒருவன் பருகுவது போல், மோக்ஷத்தில் ஆசை உடையவன், பல வித பலன்களும் சாஸ்த்ரங்களில் இருந்தாலும், அவனுக்கு தேவையானவற்றையே எடுத்துக் கொள்ள வேண்டும் என்பதை விளக்குகிறான் கண்ணன். அவ்வாறு, பகவத் கைங்கர்யமாக அமையும் நித்ய, நைமித்திக மற்றும் காம்ய கர்மங்களே ஒரு சரணாகதனுக்கு, இங்குள்ள காலம் செய்யத் தகுந்தவை ஆகின்றின என்ற கருத்து சாஸ்த்ரத்தில் கூறப்படுவதால், அதை தன் வர்ண ஆஸ்ரமத்திற்கு ஏற்ப முடிவு செய்து, அந்த சரணாகதன் அனுஷ்டிக்க வேண்டும்.

# நித்ய கர்மாக்கள் : சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட ஸந்த்யாவந்தனம், திருவாராதனம் போன்றவைகள்

# நைமித்திக கர்மாக்கள் : சாஸ்த்ரத்தில் விதிக்கப்பட்ட ஸ்ரார்தம், ஏகாதசி விரதம் போன்றவைகள்

# காம்ய கர்மாக்கள் : ஞான சம்பாத்யம், கோவில் செல்லுதல், புண்ய நதியில் நீராட்டம் போன்றவை

தனக்கு விதிக்கப்பட்ட கர்மாக்களை த்யாகத்துடன் (விடுகைகளுடன்) 'ஸாத்வீக த்யாகமாக', அதாவது ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் உகப்பிற்காகவே, செய்ய வேண்டும். 'ஸாத்வீக த்யாகம்' என்பது:

# விதிக்கப் பட்ட வைதீக கர்மாக்களை செய்ய வேண்டும்; அதை செய்யும் போது, பலனில் பற்றற்று ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனின் உகப்புக்காக செய்வதாக எண்ணம் கொள்ள வேண்டும். அதற்கு 'பலத் த்யாகம்' என்று பெயர்.

# மற்றும் 'என்னால் செய்யப்படுகிறது' என்ற எண்ணத்தை விடுவது 'மமதா த்யாகம்'. இந்த செயலும் ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனாலேயே நடத்தி வைக்கப் படுகிறது என்று செய்து போக வேண்டும்.

# மேலும், ஸர்வேஸ்வரனான ஸ்ரீமந் நாராயணனே என்னைக் கொண்டு செய்து போகிறான் என்ற எண்ணம் கொள்வது 'கத்ருத்வ த்யாகம்'.

இவ்வனுஷ்டானாதிகளை செய்யும் பொருட்டு, தான் இவைகளை சாஸ்த்ரப்படி செய்கிறோம் என்ற எண்ணத்தினால் வரும் தற்புகழ்ச்சியையும், மற்றவரை பற்றின இகழ்ச்சியையும் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். இதுவும் உத்தரக்ருத்யத்தின் ஒரு அம்சம்.



ஸ்ரீமதே ராமானுஜாய நம: ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம: அஸ்மத் ஸர்வ குருப்யோ நம: